7th March 1963]

அரசாங்க மருத்துவ மனைகளில் அறுவை நிலையங்கள்
(செங்கற்பட்டு மாவட்டம்)

* 148 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள பெரிய அரசாங்க மருத்துவ மனைகளிலுள்ள அறுவை நிலையங்களில் (Operation Theatres) குளிர்சாதன வசதிகள் அமைக்கப் பெற்றுள்ளனவா ?

(இ) எந்தெந்த இடங்களில் ?

(உ) இதர மாவட்டங்களில் இது போன்று அமைக்கப்பட்டுள்ளனவா ?

(எ) இல்லையெனில், அவ்வாறு குளிர்சாதன வசதிகள் அமைக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

(a) No.

(b) Does not arise.

(c) No.

(d) Yes.

பஞ்சாயத்து அமைத்தல் (அகரம் சிகூர்)

* 149 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி (திரு. இரா. நாராயணன் சார்பாக): கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் அகரம் சிகூர் கிராமத்தைத் தனி பஞ்சாயத்தாக ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(இ) அப்படியாயின், அது எப்போது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The question whether the existing panchayats should be bifurcated or amalgamated or retained as they are has to be considered as a general issue and a decision taken.

A decision on the question of constituting a separate panchayat for Agaramsikoor village will be considered at the appropriate time after the above general question is decided.

திரு. கரு. சீமைச்சாமி: இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துக்களில், ஒரு பஞ்சாயத்துக்கு நாலைந்து ஊர்கள் இருக்கின்றன. அந்த ஊர்கள் ஒன்றுக்கொன்று ஏழு மைல் தொலைவிலும் இருக்கின்றன. ஆகவே, இனி வரப்போகிற பஞ்சாயத்துத் தேர்தலுக்குள்ளாக பஞ்சாயத்துக்களையெல்லாம் மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துமா ?